மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், காரியாபட்டி.

**<u>அசல் வழக்கு எண். 27 /2024 (பழைய அசல் வழக்குஎண். 219/16 )</u>**

வாதி/பிரதிவாதி சாட்சியின் வாக்குமூலம் திருமதி. S.தனலட்சுமி Gr –III Bench Clerk என்பவரால் ஆணையிட்டு சத்தியபிரமாணம் செய்துவைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் : தனக்குமார் (பி.வா.சா.1 )<br>த/பெ.க/பெ :மலைச்சாமி<br>கிராமம் :<br>தாலுகா : | சாதி :<br>மதம் :<br>தொழில் :<br>வயது : |

**18.02.2025**

**வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி:–**

1. எனது மனைவிக்கு பதிலாக நான் சாட்சி சொல்வதற்கு அதிகார பூர்வமாக ஆவணம் எதுவும் எனது மனைவி எனக்கு எழுதி கொடுத்தரா என்றால் இல்லை, எனது மனைவிக்கு வேலை பளுவின் காரணமாக வாய்மொழியாக தான் என்னை சாட்சி சொல்ல அனுப்பினார். எனது மனைவி என்ன படித்துள்ளார்கள் என்றால் 12 ம் வகுப்பு படித்துள்ளார். எனது மனைவி அங்கன்வாடி பணியாளராக நாசர்புளியங்குளம் கிராமத்தில் பணிபுரிந்து வருகிறார். எத்தனை வருடமாக வேலை பார்த்து வருகிறார் என்றால் கடந்த 4 வருடமாக வேலை செய்து வருகிறார். நான் 10 ம் வகுப்பு படித்துள்ளேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். நான் நிலம் வாங்கி விற்கும் தொழில் செய்து வருகிறேன் என்றால் இல்லை.

2. தாவா சொத்தை 2013 ம் வருடம். கிரையம் பெற்றேன் என்றால் சரிதான். எனது மனைவி 2013 ம் ஆண்டுக்கு பிறகு தான் வேலைக்கு சென்றார் என்றால் சரிதான். 2013 ஆண்டுக்கு முன்பு எனது மனைவி குடும்ப தலைவியாக தான் இருந்தார் என்றால் சரிதான். எனது மனைவிக்கு தனிப்பட்ட வருமானம் கிடையாது என்றால் சரிதான். நான் மறைக்குளம் கிராமத்தில் தான் குடியிருந்து வருகிறேன் என்றால் சரிதான். தாவா சொத்தானது மானங்காத்தான் கிராமத்தில் உள்ளது என்றால் சரிதான்.

தாவா சொத்தை கிரையம் வாங்குவதற்கு முன்பு வேற பல சொத்துக்களை கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். வேற சொத்துக்களை கிரையம் வாங்கும் போது வில்லங்க சான்றிதழை சரிபார்த்து தான் கிரையம் பெற்றேன் என்றால் சரிதான். தாவா சொத்தை கிரையம் வாங்கும் போது வில்லங்கம் பார்த்து தான் கிரையம் வாங்கினேன் என்றால் சரிதான். வில்லங்க சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனது வழக்கறிஞரிடம் கொடுத்து தாக்கல் செய்துள்ளேன்.

3. இந்த வழக்கில் மூன்று பிரதிவாதிகளுக்கும் ஒரே வழக்கறிஞர் தான் என்றால் சரிதான். நான் 2013 ம் ஆண்டில் கிரையம் வாங்கியதிலிருந்து தாவா சொத்து எனது அனுபவத்தில் தான் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்து விவசாய நிலமா அல்லது தரிசு நிலமா என்றால் விவசாய நிலமாகும். நான் தற்போது வரை விவசாயம் செய்து வருகிறேன் என்றால் சரிதான். தாவா சொத்தில் நான் விவசாயம் செய்து வருவதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். நான் எந்த ஒரு ஆவணமும் தாக்கல் செய்யவில்லை வழக்கிற்காக பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1 ல் சர்வே எண் குறிப்பிடப்படவில்லையென்றால் சரிதான், பட்டா எண் மட்டும் தான் இருக்கிறது. பி.வா.சா.ஆ.2 ல் ரசீதில் தேதி எதுவும் குறிப்பிடப்படவில்லையென்றால் சரியல்ல தேதி உள்ளது. பி.வா.சா.ஆ.2 ல் குறிப்பிடப்பட்டுள்ள பட்டா எண் யார் பெயரில் உள்ளது என்றால் முதலில் சமயத்தேவர் பெயரில் இருந்தது அதன் பின்பு 2, 3 பிரதிவாதிகள் பெயரில் பட்டா மாறுதல் ஆகிவிட்டது.

4. பி.வா.சா.ஆ.3 ல் 2, 3 பிரதிவாதிகள் பெயரில் உள்ள பட்டா மாற்றத்திற்கான உத்தரவு எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு எனக்கும், வாதிகளுக்கும் வேற சொத்து சம்மந்தமாக பிரச்சனை இருந்ததா என்றால் வாதிகளுக்கும், எனது அப்பாவிற்கும் பிரச்சனை இருந்தது. வாதிகளின் குடும்பத்திற்கும், எங்களது குடும்பத்திற்கும் ஆதினம் சொத்து சம்மந்தமாக அருப்புக்கோட்டை உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு நடந்ததா என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 ன் படி 23.10.2016 ம் ஆண்டு மேற்சொன்ன ஆதினம்

சொத்து சம்மந்தமாக எங்களுக்கும், வாதிகளுக்கும் ஏற்பட்ட பிரச்சனை காரணமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளோம் என்றால் அது நிலம் சம்மந்தமாக இல்லை வேற PCR வழக்கு ஆகும்.

5. தாவா சொத்தை நான் தவறாக கிரையம் பெற்றது சம்மந்தமாக வாதிகள் என் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார்கள் அந்த விசாரணைக்கு நான் ஆஜரானேனா என்றால் ஆஜராகவில்லை. தாவா சொத்தை நான் கிரையம் வாங்கும் போது சமயத்தேவரின் வாரிசுகள் 2, 3 பிரதிவாதிகள் என்று உறுதி செய்து தான் கிரையம் பெற்றனேனா என்றால் ஆமாம். சமயத்தேவரின் இறப்பு சான்றிதழ் மற்றும் வாரிசு சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லையென்றால் எனக்கு தெரியாது. இந்த வழக்கில் எதிர் வழக்குரையை 2, 3 பிரதிவாதிகளுக்கு சேர்த்து நான் தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் எனது எதிர் வழக்குரையில் சமயத்தேவர் இறந்த தேதி மற்றும் 2, 3 பிரதிவாதிகள் தான் அவரது வாரிசு என்று குறிப்பிட்டு சொல்லவில்லையென்றால் நான் சொல்லியுள்ளேன் சமயத்தேவர் இறப்பு தேதி மட்டும் தான் சொல்லவில்லை.

6. பி.வா.சா.ஆ.5 ல் உள்ள நில வரி ரசீது யார் பெயரில் உள்ளது என்றால் சமயத்தேவர் தம்பி செல்லத்தேவர் பெயரில் உள்ளது. பி.வா.சா.ஆ.4 மற்றும் பி.வா.சா.ஆ.5 ல் உள்ள பட்டா எண் என்னவென்றால் பட்டா எண்.113 ஆகும். அந்த ரசீதில் சர்வே எண்கள் குறிப்பிடப்படவில்லையென்றால் சரிதான். மேற்படி பி.வா.சா.ஆ.4 மற்றும் பி.வா.சா.ஆ.5 யார் யார் பெயரில் தாக்கலாகி உள்ளது என்றால் சமயத்தேவரின் தம்பி செல்லத்தேவர் மற்றும் அவரது மகன் செல்வம் வழக்கின் 3 ம் பிரதிவாதி ஆகியோர்களின் பெயரில் தாக்கலாகியுள்ளது. செல்லத்தேவர் என்பவர் சமயத்தேவரின் மற்றொரு வாரிசு என்பதால் தான் சமயத்தேவரின் வாரிசு சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லையென்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 பட்டா பாஸ்புக்கில் உரிமையாளரின் பெயர் வீரபத்திரன் என்று உள்ளது என்றால் சரியல்ல பொய்யான ஆவணம் ஆகும்.

7. வா.சா.ஆ.5 தாவா சொத்திற்கான 1956 முதல் 2016 வரையிலான வில்லங்க சான்றிதழில் 2013 ம் வருடம் வரை வேற எந்த ஒரு பரிவர்த்தனையும் காட்டவில்லையென்றால் நான் 2013 ம் வருடத்திற்கு பிறகு தான் கிரையம் பெற்றேன். நான் தாவா சொத்தை கிரையம் பெறும் போது விவாசய நிலமாக இருந்ததா அல்லது தரிசு நிலமாக இருந்ததா என்றால் விவசாய நிலமாக தான் இருந்தது. அந்த நிலம் விவசாய நிலமாக இருந்ததற்கு ஆவணம் எதுவும தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். நான் அந்த மாதிரி ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.TAU–Marutham எனது மனைவி பெயரில் பட்டா மாற்றியதற்கு பட்டா மாறுதல் உத்தரவு தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். எனது மனைவி பெயரில் உள்ள பட்டா எண் என்னவென்றால் பட்டா எண்.555 ஆகும்.

**(வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது )**